04.02.2026

OS. No. 291/2018

**PW.2 – சுசீலா**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் வாதி கேட்டுக்கொண்டதின்படி தான் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு சொத்து வாங்குவதற்கு கிரைய தொகையை வாதி, பிரதிவாதி இரண்டு பேரும் சேர்ந்துதான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாதிதான் தன்னுடைய வங்கி கணக்கிலிருந்து வரைவோலை மூலமாக எனக்கு கிரையத் தொகையை கொடுத்தார். மீதி பணத்தை வாதிதான் எனக்கு பணமாக கொடுத்தார். பிரதிவாதி வேலைக்கு செல்கிறாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. நான் வாதி கேட்டுக்கொண்டதிற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> :** பிரதிவாதி தனக்கு கிரீன் கார்டு கிடைத்தால்தான் வேலைக்கு செல்வேன் என்றும், அதுவரை வேலைக்கு செல்லவில்லை என்றும் என்னிடம் சொன்னார். அவர் வழக்கறிஞர் படித்துள்ளதாக சொன்னார். ஆனால், தொழில் செய்யவில்லை என்றும் சொன்னார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.02.04 18:37:50 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.